வடமராட்சிக்கான
உதயன்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 79
திங்கட்கிழமை 13 பெப்ரவரி 2023
மாசி 01 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054
விலை ரூ. 50
பக்கங்கள் 12

## 13ஐ நடைமுறைப்படுத்த முத்தரப்பு பொறிமுறை!

### மோடியுடனான சந்திப்புக்கும் கூட்டமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்ரவரி 13

13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த முத்தரப்பு பொறிமுறை உருவாக்கப்படவேண்டும் எனவும் அதை இந்தியாவால் மாத்திரமே செயற்படுத்தமுடியும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களில் ஒருவரான சுரேஷ் பிரேமச்சந்திரன், இணை அமைச்சர் எல். முருகனிடம் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் இந்தியப் பிரதமர் மோடியைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துதரவேண்டுமென மற்றொரு பங்காளிக் கட்சித் தலைவரான செல்வம் அடைக்கலநாதன் கோரியுள்ளார். >>11

## சுற்றுலாவில் விபரீதம் தோணி கவிழ்ந்ததில் 3 மாணவர்கள் சாவு!

### காப்பாற்ற முயன்ற ஆசிரியரும் உயிரிழப்பு

மட்டக்களப்பு, பெப். 13

மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை தாந்தாமலை வட்டைக்குளத்தில் சுற்றுலா சென்ற 3 மாணவர்கள் தோணி மூழ்கியதால் >>11

## கணவனின் பிரிவுதாங்காது மனைவியும் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 13

கணவர் மாரடைப்பால் இறந்த செய்தி கேட்ட மனைவி தவறான முடிவெடுத்து தனக்குத் தானே தீ மூட்டி உயிரிழந்துள்ளார். >>11

## மதிலுடன் மோதி விபத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 13

கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த >>11

## விபத்தில் சிக்கிய இளைஞன் சாவு!

யாழ்., பெப். 13

விபத்தில்சிக்கிப்படுகாயமடைந்த 20 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலி, கதிரிப்பாயைச் சேர்ந்த விஜயரட்ணமூர்த்தி விபுசன் (வயது-20) என்ற >>11



## கிளிநொச்சியில் பச்சை இளநீரை பருகிய ரணில்

கிளிநொச்சி, பெப். 13

கிளிநொச்சியில் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பச்சை இளநீர் குடிக்கக் கொடுக்கப்பட்டது. அவரும் அதனை ருசித்துப் பருகியதைக் காணமுடிந்தது. >>11

## ‘விலங்கு காதல் வாரம்’ இலங்கையில் அறிமுகம்

### காதலர் தினத்தை முன்னிட்டு இந்த ஏற்பாடாம்

கொழும்பு, பெப். 13

தெஹிவளை தேசிய விலங்கியல் பூங்காவில் நேற்று முதல் ‘விலங்கு காதல் வாரம்’ பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதாக விலங்கியல் >>11

## தேர்தலுக்கு ஒத்துழைக்காவிடின் நீதிமன்றை நாங்கள் நாடுவோம்

### திணைக்களங்களுக்கு ஆணைக்குழு எச்சரிக்கை



கொழும்பு, பெப். 13

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை திட்டமிட்டபடி நடத்துவதற்கான ஆணைக்குழுவின் முயற்சிகளுக்கு திறைசேரி மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் ஒத்துழைக்காவிட்டால், தேர்தல்கள் ஆணைக்குழு உயர் நீதி >>11

## இராமருக்கு குடமுழுக்கு நடந்த இடமாம் பலாலி

### வரலாற்றை திரித்துப்பேசிய பா.ஜ.கவின் அண்ணாமலை

யாழ்ப்பாணம், பெப். 13

இந்தியாவின் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலை பலாலி என்ற பெயர் வருவதற்குக் காரணம் என்ன >>11

## 15 வயதுச் சிறுவனால் சகோதரி வன்புணர்வு

### ஒரு வருடமாகத் தொடர்ந்த கொடுமை

யாழ்ப்பாணம், பெப். 13

மன்னார் - பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 15 வயதுச் சிறுவனால் தொடர்ச்சியாக ஓராண்டாக 13 வயதான சகோதரி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளாரென பொலிஸார் தெரிவிக்கின்றனர். >>10

## அடித்தால் திருப்பியடிப்போம் நாம் ஒன்றும் யேசுநாதரல்லர்

### எதிரணிகளை எச்சரிக்கிறார் சீ.வீ.கே.சிவஞானம்

யாழ்ப்பாணம், பெப். 13

அடித்தால் திருப்பி அடிப்போம். நீங்கள் அடித்தால் நாங்களும் திருப்பி அடிப்போம். ஒரு கன்னத்தில் அடிக்க மறு கன்னத்தையும் காட்ட நாம் ஒன்றும் யேசுநாதர்கள் அல்லர் - இவ்வாறு வடக்கு மாகாண அவைத் >>11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாசங்கத்தினரிடம் மன்னிப்புக் கோருக!

## விக்னேஸ்வரனுக்கு சு.க. வலியுறுத்து

கொழும்பு, பெப். 13

வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விக்னேஸ்வரன் மகாசங்கத்தினரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டுமென சிறிலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் அக்கிராசன உரை நிகழ்ந்த நாளன்று பௌத்த பிக்குகள் பலர் இணைந்து, பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தக்கூடாது என்று நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டம் செய்தனர். அத்துடன், 13ஆவது திருத்தத்தையும் அவர்கள் தீ வைத்து எரித்தனர். இதையடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் நாட்டின் முதன்மைப் பௌத்த பீடங்களுக்கு கடிதம் எழுதினார். அதில், ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பாவித்து பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டு என விக்னேஸ்வரன் கூறியிருந்தார்.

"நாடு தற்போது பிச்சைப்பாத்திரத்துடன் உலகை வலம் வருகையில் பதின்மூன்றை அமுல்படுத்துவது ஓர் ஆரோக்கியமான நடவடிக்கையே. அல்லாதுவிடின் இலங்கை தொடர்ந்தும் யாசகமெடுக்கும், மகாநாயக்கர்கள் பிரிவினை பற்றிக் கவலைப்படுவதாக இருந்தால், அது நிகழ்ந்துவிடக்கூடாது என்பதற்காக தமிழர்களை அரசமைப்பு ஊடாக வன்முறை மூலம் கட்டுப்படுத்த முயற்சிக்கிறார்களா? அக்கினிச் சூத்திரமும், தீர்க்க நிகாயவும் இதையா போதிக்கின்றன?" என்றும் வெளிப்படையாகவே கேள்வி எழுப்பி விமர்சித்து இருந்தார் விக்னேஸ்வரன்.

அவரின் இந்தக் கடிதத்துக்கே சுதந்திரக்கட்சி தற்போது கடும் எதிர்ப்பைப் பதிவுசெய்துள்ளதுடன், இது தொடர்பில் விக்னேஸ்வரன் மகாசங்கத்தினரிடம் மன்னிப்புக்கோர வேண்டும் என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தியுள்ளார். (ம-6)



# இறக்குமதி செய்யப்படுகின்ற உ.கிழங்குக்கு வரி விதிக்குக

## விவசாய அமைச்சு கோரிக்கை

கொழும்பு, பெப். 13

உள்ளூர் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் வகையில், இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்குக்கு விசேட வரி விதிக்கப்பட வேண்டும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர கோரிக்கை விடுத்துள்ளார்.

விவசாய அமைச்சின் நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் வெலிமடை பொரலந்த பிரதேசத்தில் விதை உருளைக்கிழங்கு அறுவடை நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

நாட்டில் உருளைக்கிழங்கு பயிரிடும் விவசாயிகளையும் உள்ளூர் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையையும் பாதுகாக்கவேண்டும். உள்ளூர் உருளைக்கிழங்கு அறுவடை செய்யும் ஒவ்வொரு காலப்பகுதியில் அரசாங்கம் உருளைக்கிழங்கை இறக்குமதி செய்வதால் உள்ளூர் உற்பத்தியை சந்தைப்படுத்துவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

இதனால் விவசாயிகள் உருளைக்கிழங்குச் செய்கையை கைவிட வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

நாட்டில் பெருந்தொகை முதலீடுசெய்து உருளைக்கிழங்கு பயிரிடும் விவசாயிகளை பாதுகாக்க வேண்டும். அதற்கமைய உருளைக்கிழங்கு இறக்குமதியைத் தடைசெய்வதற்குப் பதிலாக இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்குக்கு வரிவிதிக்க வேண்டும். இதுதொடர்பில் விவசாய அமைச்சின் செயலாளர் ஊடாக நிதி அமைச்சின் செயலாளருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் அமைச்சரவைக் கூட்டத்தின்போது ஜனாதிபதியிடமும் எடுத்துரைக்கப்படும் - என்றார். (ச-இ)

# தலதா மாளிகைச் சொத்தை வாரிச் சுருட்டிய மஹிந்த!

## இரகசியம் வெளியிட்ட தலதா மாளிகை அதிகாரி

கொழும்பு, பெப்.13

பௌத்த தலதா மாளிகைக்குச் சொந்தமான 50 கோடி ரூபா மதிப்புள்ள தங்கம், ஒன்பது கோடி மதிப்பிலான நிலத்தை விற்ற பணம் ஆகியவற்றை இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அபகரித்துள்ளார். அதனை நானே வழங்கினேன் என தலதா மாளிகையின் முன்னாள் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகமொன்றுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் தலதா மாளிகைக்கு சொந்தமான 50 கோடி மதிப்புள்ள தங்கத்தையும் ஒன்பது கோடி மதிப்பிலான நிலத்தையும் விற்று முழுப்பணத்தையும் நானே எண்ணி மூடைகளாக கட்டினேன். குறித்த பணம் மஹிந்தவிடம் ஒப்படைக்கப்பட்டது. தலதா மாளிகையின் நாளொன்றுக்கான வருமானம் 20 இலட்சம் ரூபா. ஆனால் இந்தப் பணம் எங்கு செல்கின்றதென்பது தொடர்பில் கணக்கறிக்கை இல்லை. இது தொடர்பில் மகாநாயக்க தேரர்களுக்கும் தெரியப்படுத்தியிருந்தேன். இது குறித்த முழு விவரமும் ஆதாரமும் என்னிடமுள்ளது. அனைத்து இரகசியங்களும் எனக்குத் தெரியும் என்பதனால் தற்போது என்னைப் பழிவாங்க முற்படுகின்றனர் - என்றார். (ச-இ)

# நெல் கொள்வனவுக்கு 10 பில்லியன் ஒதுக்கீடு

## விவசாய அமைச்சு தகவல்

கொழும்பு, பெப்.13


பெரும்போக நெல் கொள்வனவுக்காக 10 பில்லியன் ரூபாவை விடுவிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்ததாவது:-

இம்முறை மேற்கொள்ளப்பட்ட பெரும்போகத்தில் பல மாவட்டங்களில் நெல்லை விற்க முடியாமல் விவசாயிகள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

தனியார் வியாபாரிகள் அடிமட்ட விலைக்கே வாங்குவதற்கு முனைகின்றனர் எனக் கூறப்படுகிறது. இந்தநிலையில் நெல்லைக் கொள்வனவு செய்ய 10 பில்லியன் ரூபாவை விடுவிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. கொள்வனவு செய்யப்படும் நெல் சிறிய ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டு அரிசியாக மாற்றப்படும்.

அதன் பின்னர், அந்த அரிசியை குறைந்த வருமானம் பெறும் 30 லட்சம் குடும்பங்களுக்கு இரண்டு மாதங்களுக்கு நிவாரணமாக வழங்க அரசு திட்டமிட்டுள்ளது - என்றார். (ச-இ)



# 206 நட்சத்திர ஆமைகள் மலேசியாவுக்கு கடத்தல்

## சுங்கப்பிரிவால் முறியடிப்பு

கொழும்பு, பெப். 13

மலேசியாவுக்கு கடத்த முற்பட்ட 206 நட்சத்திர ஆமைகள், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்று சுங்கப்பிரிவு அதிகாரிகளால் உயிருடன் மீட்கப்பட்டுள்ளன.

விமான நிலையத்தின் ஏற்றுமதி முனையத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே இந்தக் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது என சுங்கப் பிரதிப் பணிப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான சுதத்டி சில்வா தெரிவித்தார். சாக்குகளில் சுற்றப்பட்டு ஆறு பெட்டிகளில் அடைக்கப்பட்டு 'உலர்ந்த கடல் உணவுகள்' என்று குறிப்பிட்டு இந்தக் கடத்தல் மேற்கொள்ளப்படவிருந்த நிலையில் அவை மீட்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்து சட்டவிரோதமாக வர்த்தகம் செய்யப்படும் உயிரினங்களின் பட்டியலில் நட்சத்திர ஆமைகள் உள்ளன. இவ்வகையான ஆமை இனம் அழிந்துபோகும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள நிலையில் இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம், விலங்கினங்களின் சிவப்புப் பட்டியலில் இதைச் சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# சட்டவிரோத மரக்கடத்தல் முறியடிப்பு



முல்லைத்தீவு, பெப். 13

முல்லைத்தீவு விசுவமடுப் பகுதியில் 'கப் ரக' வாகனத்தில் முன்னெடுக்கப்பட்ட மரக்கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது.

தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கைகளின் அடிப்படையிலேயே இந்தக் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது. வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டு அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. மரக்குற்றிகளும் அவற்றை மறைத்து வைத்துக் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட வாகனமும் பொலிஸாரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டன. (ம-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உணவுப் பாதுகாப்பை மேம்படுத்த நலிவுற்ற மக்களுக்கு நிதியுதவி!

### இலங்கைக்கு கைகொடுக்கும் உலக உணவுத் திட்டம்

கொழும்பு, பெப். 13
இலங்கையில் பொருளாதாரம் பாதிக்கப்பட்ட 2 லட்சத்து 44 ஆயிரம் பேரின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த இம்மாதம் தொடக்கம் எதிர்வரும் மே மாதம் வரை நிதியுதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று உலக உணவுத் திட்டம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் உலக உணவுத் திட்டம் வெளியிட்ட அறிக்கையில் உள்ளதாவது:-
இலங்கையில் பொருளாதார நெருக்கடியின் விளைவாக உணவுப் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்படும் மக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. தரவுகளின் பிரகாரம் நாடளாவிய ரீதியில் 37 வீதமான குடும்பங்கள் உணவுப் பாதுகாப்பின்மை நிலைக்கு முகம்கொடுத்து வருகின்றன.

அந்தவகையில் நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் கிளை அமைப்புக்களான உலக உணவுத்திட்டம், உணவு மற்றும் விவசாய அமைப்பு, யுனிசெப் அமைப்பு ஆகியவை பல்வேறு சர்வதேச பொதுக்கட்டமைப்புக்கள் அத்தியாவசிய உதவிகளை வழங்கி வருகின்றன.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் உலக உணவுத் திட்டத்தின் அவசர உதவி வழங்கல் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தற்போதுவரை சுமார் 1.8 மில்லியன் மக்களுக்கு அவசியமான உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்பட்ட சோளம் மற்றும் சோயா உள்ளிட்ட மூலப் பொருள்களைப் பயன்படுத்தி ஒரு மில்லியனுக்கும் அதிகமான திரிபோஷா பைக்கற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

அதற்கும் மேலதிகமாக இந்த வருடம் பெப்ரவரி மாதம் முதல் மே மாதம் வரையான காலப்பகுதியில் பொருளாதாரம் நலிவுற்ற 2 லட்சத்து 44 ஆயிரம் பேருக்கான நிதியுதவிகளை வழங்குவதற்கு உலக உணவுத்திட்டம் தீர்மானித்துள்ளது - என்றுள்ளது. (ச-இ)

# ஜனாதிபதிக்கான ஆணை தேர்தலின்போது தெரியும்

### அநுரகுமார தெரிவிப்பு



கொழும்பு, பெப். 13
தமக்கான மக்களாணை எந்தளவில் உள்ளது என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளூராட்சித் தேர்தல் ஊடாகப் பரிசீலித்துக் கொள்ள வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அரச வருமானத்தை குறுகிய காலத்தில் அதிகரித்துக்கொள்ள அரசாங்கம் நியாயமற்ற வகையில் முன்னெடுத்த வரிக் கொள்கையால் சிறு மற்றும் நடுத்தர தொழிற்றுறை முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. மூலப்பொருள்களின் விலை பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதால் பெரும்பாலான தொழிற்றுறையினர் உற்பத்தி நடவடிக்கையில் இருந்து விலகியுள்ளார்கள்.
வீழ்ச்சியடைந்துள்ள சிறு மற்றும் நடுத்தர தொழிற்றுறையை மீளக் கட்டியெழுப்பும் திட்டங்களை ஜனாதிபதி தனது கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடவில்லை. பிரபல்யமடையும் தீர்மானங்களை எடுக்கப் போவதில்லை என ஜனாதிபதி குறிப்பிட்டார்.
அவரால் பிரபல்யமடையும் தீர்மானங்களை எடுக்கமுடியாது, ஏனெனில் அவர் மக்கள் பிரதிநிதியல்லர், ராஜபக்சக்களின் பிரதிநிதி.
பொருளாதாரப் பாதிப்புக்கு அரசியல் மாற்றத்தின் ஊடாகத் தீர்வுகாண முடியாது என ஆளும் தரப்பினர் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. தமக்கான அரசாங்கத்தை நாட்டு மக்கள் தெரிவு செய்தால் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண ஒத்துழைப்பு வழங்குவார்கள் - என்றார். (ம)

### அரச நிறுவனங்களின்

## போக்குவரத்துக்கான செலவுகள் குறைப்பு!

கொழும்பு, பெப்.13
அனைத்து அரச நிறுவனங்களிலும் அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரமே குறித்தொதுக்கப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்தவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. திறைசேரி செயலாளர் சிறிவர்த்தன இந்த விடயத்தை அறிவித்துள்ளார்.
இயன்றவரை இணையவழி முறைகளைப் பயன்படுத்தி கூட்டங்கள் மற்றும் மாநாட்டு கலந்துரையாடல்களை நடத்த வேண்டும் என்றும், தவிர துணை அலுவலகங்களால் எளிதில் ஈடுசெய்யக்கூடிய கடமைகள் மற்றும் சேவைத் தேவைக்கான போக்குவரத்துச் செலவை குறைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

## தேர்தலை நடத்தி மக்களின் உரிமைகளைப் பாதுகாக்குக

### ஜி.எல்.பீரிஸ் வலியுறுத்து

கொழும்பு, பெப். 13
நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை ஆட்சியாளர்களின் தேவைக்கேற்ப தீர்மானிக்கமுடியாது. அரசமைப்பின் பிரகாரம் தேர்தல்கள் காலத்துக்குக்காலம் நடத்தப்பட வேண்டும் -இவ்வாறு பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.
நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
உள்ளூராட்சித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் படுதோல்வியடைவது நிச்சயம். அதன் காரணமாகவே அரச நிறுவனங்கள் ஊடாகத் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்த அரசாங்கம் முனைகிறது. தேர்தல் நடவடிக்கைகளுக்கு எரிபொருள் விநியோகிப்பது சிக்கலானது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது. பாதுகாப்புத் தரப்பினர் தேர்தல்கால செலவுகளை பன்மடங்கு மதிப்பிட்டு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். அரச நிறுவனங்கள் ஊடாகத் தேர்தலுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்த முயல்வது அரசியல் வரலாற்றில் முன்னொருபோதும் இடம்பெறவில்லை. ஆட்சியாளர்களின் தேவைக்கு ஏற்ப நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளைத் தீர்மானிக்க முடியாது. நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை உயர்நீதிமன்றம் பாதுகாக்கும் என்ற நம்பிக்கை எமக்கு முழுமையாக உள்ளது - என்றார். (ச-இ)

# ‘பிச்சைக் கிண்ணம்’ ஏந்தும் இலங்கை சுதந்திர தேசமா?

### பேராயர் மல்கம் ரஞ்சித் காட்டம்

கொழும்பு, பெப். 13
பெப்ரவரி 4ஆம் திகதி கொண்டாடப்பட்ட இலங்கையின் சுதந்திரதினக் கொண்டாட்டம் இலங்கை 'பிச்சைக்கிண்ணத்துடன்' சுற்றிவரும் ஒரு தேசம் என்பதை உணர்த்துகின்றது. நாட்டு மக்கள் நீதியின் அனைத்து உணர்வுகளையும் இழந்துவிட்டனர்.
இவ்வாறு கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
2023ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்த 75ஆவது வருடத்தைக் குறிக்கும். இலங்கையுடன் சுதந்திரம் பெற்ற பல நாடுகள் முன்னேறியுள்ளன.
ஆனால் இலங்கை ஓர் ஏழை நாடு என்ற அடையாளத்தைப் பெற்றுள்ளது.
இலங்கை பொருளாதாரச் சரிவை மட்டுமன்றி, தார்மீக வீழ்ச்சியையும் சந்தித்துள்ளது. தார்மீக ரீதியாக எங்களால் சரியானதைச் செய்ய முடியவில்லை. மக்கள் நீதியின் பாலான அனைத்து நம்பிக்கையையும் இழந்துவிட்டனர்.
வரலாற்று ரீதியாக இழைத்த தவறுகளால் இந்த நெருக்கடியான கட்டத்தை நாடு அடைந்துள்ளது.
குறிப்பாக திறந்த பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தியதன் காரணமாகவே நாடு பெருமளவு சார்ந்து நிற்கும் பொருளாதாரமாக மாறியுள்ளது.
21துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்துக் கொண்டாடப்பட்ட சுதந்திரதினக் கொண்டாட்டம், இலங்கை 'பிச்சைக் கிண்ணத்துடன்' சுற்றிவரும் ஒரு சுதந்திரதேசம் என்பதையே வெளிப்படுத்துகிறது. தேசத்தைக் கட்டியெழுப்ப ஒன்றுபட்டு புதிய கட்டமைப்பை ஏற்படுத்தவேண்டும் - என்றார். (ச-இ)

### நிலக்கரிக் குழுவிலிருந்து நீதியமைச்சர் விலகல்!

கொழும்பு, பெப். 13
நிலக்கரிக் கொள்வனவு தொடர்பான அமைச்சரவையின் உபகுழுவிலிருந்து விலகுவதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
அமைச்சரவை செயலாளருக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் சரியான முடிவுகளுக்கு வரும் வகையிலான கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு குறித்த அமைச்சரவை உபகுழுவின் அதிகாரிகள் தயக்கம் காட்டுகின்றனர். கூட்டங்கள் குறித்து உரிய முறையில் தமக்கு அறிவிக்கப்படுவதில்லை உள்ளிட்ட இரு காரணங்களால் இந்தப் பதவிவிலகல் தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிக்குற்றத்தில் தொடர்ந்து ஈடுபடுகிறது பெரமுன அரசு!

*எதிர்க்கட்சித் தலைவர் சஜித் விளாசல்*

**கொழும்பு, பெப். 13**

**இந்த அரசாங்கம் நிதிக்குற்றங்களில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றது. இவர்களுக்கு மக்கள் தக்கபாடத்தைக் கற்பிப்பார்கள்- இவ்வாறு தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:- கோடிக்கணக்கான தேவையற்ற செலவுகளைச் செய்து சுதந்தி ரத்தைக் கொண்டாடியிருக்க வேண்டிய தேவையில்லை.

செலவு செய்யப்படவேண்டிய பல அத்தியாவசிய தேவைப்பாடுகள் உள்ளன. சுதந்திரதினத்தன்று நடமாடும் கழிவறைக்கு ஒரு கோடியே 42 லட்சம் ரூபா ஒதுக்குவதற்குப் பதிலாக அந்தப் பணத்தை ஏழை மக்களுக்கு சலுகைகளை வழங்க, மீனவர்களுக்கும் விவசாயிகளுக்கும் எரிபொருள் மற்றும் உரமானியம் வழங்க நடவடிக்கைகளை எடுத்திருக்கலாம். இதை ஜனாதிபதியும் அமைச்சர்களும் நினைக்கவில்லையா? இவ்வாறு செலவிட முன்னர் உங்கள் மனசாட்சியை தொட்டுப்பாருங்கள்.

கடந்த காலங்களில் மக்கள் போராட்டத்தால் நிதியமைச்சர், பிரதமர், ஜனாதிபதி ஆகியோர் நாட்டை விட்டே துரத்தியடிக்கப்பட்ட போதிலும் பெரமுனவின் 134 பேர் தந்திரமாக ராஜபக்சவுக்கு விசுவாசமான ஒருவரை மெய்ப்பாது காவலராகவும் ஜனாதிபதியாகவும் நியமித்துள்ளனர்.

ராஜபக்சவுக்கு ஆதரவான அரசாங்கத்தை உருவாக்க மக்கள் வீதிக்கு இறங்கவில்லை. ஆதலால் இந்த அரசாங்கத்துக்கு மக்கள் தக்கபாடத்தைக் கற்பிப்பார்கள் - என்றார். (ம)

## இனக்கலவரத்தில் தமிழரின் வீட்டை எரித்த பேராசிரியர்

*40 ஆண்டுகளின் பின்னர் உண்மையை அம்பலப்படுத்துகிறார் ருகுணு துணைவேந்தர்*

கொழும்பு, பெப். 13

1983ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளின்போது, ஜே.வி.பியினருக்காக தமிழர்களின் வீடுகளையும், கடைகளையும் எரித்த ஒரு பேராசிரியரே இன்று என்னை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்கிறார். அவர்கள் பல்கலைக்கழகத்தை வைத்து அரசியல் செய்யப் பார்க்கிறார்கள். வீடற்ற தமிழ்க் குடும்பம் ஒன்றுக்கு வீட்டைக் கட்டிக் கொடுத்து விட்டு அரசியல் செய்யட்டும்- என்று ருகுணு பல்கலைக்கழகத் துணை வேந்தர் மூத்த பேராசிரியர் சுஜீவ அமரசேன தெரிவித்துள்ளார்.

ருகுணு பல்கலைக்கழகத் துணைவேந்தரை ஏழு நாள்களுக்குள் பதவி நீக்கவேண்டும் எனக்கோரி நாடெங்கிலும் உள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அடையாளப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர். இது தொடர்பில் பகிரங்க அறிக்கை மூலம் தெளிவுபடுத்தி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே பேராசிரியர் சுஜீவ அமரசேன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனச் செயலர் றொகான் லக்சிறிக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்த ருகுணு பல்கலைக்கழகத் துணை வேந்தர் மூத்த பேராசிரியர் சுஜீவ அமரசேனவை உடனடியாகப் பதவி நீக்கம் செய்யவேண்டும் என்பதை வலியுறுத்தி எதிர்வரும் 15 ஆம் திகதி நாடெங்கிலும் உள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அடையாள பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர். அதேநேரம் ருகுணு பல்கலைக்கழக வெலமடம வளாகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில், கடந்த 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் பிரதிநிதிகளால் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதுடன், ஏழு நாள்களுக்குள் துணைவேந்தரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என ஜனாதிபதிக்கு நிபந்தனைக் கடிதமொன்றை அனுப்புவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் றொகான் லக்சிறி கடந்த 5 ஆம் திகதி தனது அலுவலகத்துக்குச் சென்ற சமயம், அவரது அறையிலிருந்து வழக்கத்துக்கு மாறான மணம் வந்ததாகவும், அது அவரைக் கொலை செய்யும் வகையில் பரவவிடப்பட்ட நச்சு வாயுக் கசிவு என்றும் துணை வேந்தருக்கு எதிரான குற்றச்சாட்டில் தெரிவிக்கப்படுகிறது. எனினும் இவையனைத்தும் தன்னைப் பதவி நீக்கம் செய்வதற்காக வேண்டுமென்றே சோடிக்கப்பட்டவை என்று குறிப்பிட்டுள்ள துணை வேந்தர், தனக்கெதிரான சதியில் முன்னிற்போருக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்துள்ளார்.

இதேநேரம், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் றொகான் லக்சிறியின் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைத் தான் மறுப்பதாகத் தெரிவித்துள்ள துணைவேந்தர், மேலும் குறிப்பிடுகையில்; றொகான் லக்சிறி, பேராசிரியர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி மற்றும் பேராசிரியர் உப்புல் அபேரத்ன ஆகியோர் அரசியல் காரணங்களுக்காகவே என்னைப் பதவியில் இருந்து நீக்குவதற்குப் பாடுபடுகிறார்கள். நான் இந்தப் பல்கலைக்கழகத்துக்கு இரண்டாவது தடவையாகத் திறமை அடிப்படையில் கூடிய புள்ளிகளைப் பெற்றுத் துணைவேந்தராகத் தெரிவுசெய்யப்பட்டவன். அரசியல் செல்வாக்கினால் பதவியைப் பெற்றவன் நானல்லன். இங்கு கலாநிதிப் பட்டத்துக்காக நிதியைப் பெற்றுவிட்டு 13 வருடங்களுக்கு மேல் பணத்தை மீளளிக்காமல் இருப்பவர்களும், ஆராய்ச்சி ஒதுக்கீடுகள் மற்றும் பரீட்சைகளில் மோசடி செய்வோருமே எனக்கு எதிராக என்னைப் பதவி நீக்கம் செய்யத் துடிக்கிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-இ)

## கால்நடைகள் வளர்ப்பு விழிப்புணர்வு அமர்வு!

மன்னார், பெப். 13

சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாக பேசாலையில் கால்நடை வளர்ப்புத் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

பேசாலை விவசாய சங்கத் தலைவர் அன்ரன் பல்டானோ தலைமையில் இந்த விழிப்புணர்வுக் கருத்தமர்வு இடம்பெற்றது.

கருத்தமர்வில் மன்னார் கால்நடைப் பிரிவு கால்நடை மருத்துவ அதிகாரி திருமதி ஜீசஸ் மரியா, பேசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி அலுவலர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு கால்நடை வளர்ப்புத் தொடர்பில் விளக்கமளித்தனர். (ச-60)

## சிவனொளிபாத மலையில் குழந்தையை பிரசவித்த பெண்

கொழும்பு, பெப். 13

சிவனொளிபாதமலைக்கு வழிபாட்டுக்காகச் சென்ற பெண்ணொருவர் பெண் குழந்தையொன்றை பிரசவித்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சிவனொளிபாதமலைக்கு நாடளாவிய ரீதியில் பெருமளவான யாத்திரிகர்கள் யாத்திரை மேற்கொண்டுள்ளனர்.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சிவனொளி பாதமலையில் ஏறிக்கொண்டிருந்த பெண்ணொருவருக்கு திடீரென பிரசவவலி ஏற்பட்டு பெண் குழந்தையைப் பிரசவித்துள்ளார். பிறந்த குழந்தையும் தாயும் அருகிலுள்ள டிக்கோயா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். தாயும் சேயும் ஆரோக்கியமாக உள்ளனர் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்படவேண்டிய நாள். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்த்துவிடவும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். நண்பர்களால் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் மூலம் குடும்பத்தில் சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**கடகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் இடையூறுகளும் நீங்கும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**சிம்மம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**கன்னி:** தேவையான பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்து விடுவீர்கள். உறவினர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். செலவு ஏற்படும். சங்கடங்கள் நீங்கும்.

**துலாம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். எதிர் பார்த்த பணஉதவி கிடைக்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், திடீர் செலவுகளும் ஏற்படும். பிள்ளை களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். உங்கள் முயற்சிக்கு பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**மீனம்:** புதிய முயற்சிகளை தொடங்கவும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உண்டு.

## உறங்கச்சென்றவர் சடலமாக மீட்பு

கிளிநொச்சி, பெப். 13

கிளிநொச்சி, அம்பாள் நகர் பகுதியில் வீட்டில் படுத்து உறங்கிய நிலையில் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முருகன் இரத்தின குமார் (வயது- 36) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மனைவி பிள்ளைகளுடன் உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்த சமயம் தனிமையில் படுத்து உறங்கிய நிலையில் சடலமாக இனங்காணப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிபொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ஓ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# பலாலிக்கு வந்த சோதனை

"இராமாயணத்தில் வரும் எல்லாப் பாத்திரங்களும் முஸ்லிம்களே. ராவுன் என்பதே இராவணனாகவும், ரஹ்மான் என்பதே இராமனாகவும், சைய்யிதா என்பதே சீதை என்பதாகவும் பின்னர் திரிபடைந்து விட்டன. அதனால் தான் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கட்டப்பட்ட பாலத்தைக் கூட இஸ்லாமியரின் முதல் மனிதரான ஆதம் கட்டியதாகப் பொருள்படும் வகையில் ஆதம் பாலம் என்று கூறுகிறார்கள். எனவே இலங்கை சிங்களவர்களினதோ, தமிழர்களினதோ தாயகம் அல்ல, அது முஸ்லிம்களின் பூர்விக நிலம்"

இப்படியான 'அதிமேதாவித்தனமான' கண்டுபிடிப்புகளால் இலங்கை மக்களிடையே அதிகம் பிரபலமானவர் உலாமாக் கட்சியின் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் . அந்தக் கட்சியில் தலைவர், செயலாளர், பேச்சாளர், தொண்டர் எல்லாம் அப்துல் மஜீத் என்ற ஒற்றை மனிதர் மட்டுமே. இப்படி ஒரேயோரு ஆளை மட்டும் கொண்டியங்கும் கட்சியை வைத்திருந்தாலும், எல்லாப் பெயருக்கும் ஏதேனும் சம்பந்தமில்லாத முஸ்லிம் சாயத்தைப் பூசி, அதைத் தன்னுடைய கண்டுபிடிப்பாக பேசி, முஸ்லிம் மக்களே கிண்டலடிக்கும் அளவுக்கு உளறிக்கொட்டியதாலேயே அவர் பிரபலமானார். இப்படி சம்பந்தமேயில்லாமல் வாயில் வந்ததையெல்லாம் அடித்துவிடுவதில் ஒப்பாரும் மிக்காருமில்லாதவராக விளங்கிய அப்துல் மஜீத்துக்கு இப்போது ஒரு போட்டியாளர் முளைத்திருக்கிறார். அவர் வேறு யாருமல்லர், பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலையே அந்தப் போட்டியாளர்.


யாழ்ப்பாணத்தில் இந்திய அரசின் நிதியுதவியோடு அமைக்கப்பட்ட கலாசார மத்திய நிலையத்தை மக்களுக்குக் கையளிக்கும் நிகழ்வுக்காக பலாலி சர்வதேச விமானநிலையத்தினூடாக வந்திறங்கிய இந்தியக்குழுவில் பா.ஜ.க.வின் தமிழகத் தலைவர் அண்ணாமலையும் ஒருவர். வந்தவர் அப்படியே பயணக் களைப்புக் கூட மாறாமல் கம்பன் கழக விழாவில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது ' இலங்கைக்கு வந்த இராமருக்கு பாலாலயம் செய்யப்பட்ட இடமே இப்போது பலாலி என்றழைக்கப்படுகின்றது' என்று போட்டாரே ஒரு போடு! 'அட இந்த உண்மை எங்களுக்குத் தெரியாமல் போயிற்றே' என்று கம்பனைக் கரைத்துக் குடித்த பேரறிஞர் கூட்டத்தினர் வெட்கித் தலைகுனிந்ததோடு, பின்னர் கரவொலியெழுப்பி அண்ணாமலையின் இந்த அரிய கண்டுபிடிப்பைப் பாராட்டவும் செய்தனர். அண்ணாமலையின் இந்தக் கண்டுபிடிப்பைக் கேட்டறிந்தால்,,உளறலுக்குப் பேர்போன மௌலவி அப்துல் மஜீத் நாட்டை விட்டே தப்பியோடியிருப்பார்.

இப்போது சமூகவலைத்தளங்களில் அண்ணாமலையின் பலாலி உருவான கதைதான் வைரல். பொருளாதார நெருக்கடியால் துவண்டு போயிருந்த பலரும் விழுந்துவிழுந்து சிரிக்கும் ஒரு வாய்ப்பை வழங்கியமைக்காக அண்ணாமலையை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அண்ணாமலை இப்படி சகட்டுமேனிக்கு வாய்க்கு வந்ததை அவிழ்த்துவிடுவது இதுவொன்றும் முதல்முறையல்ல. இவர் இந்தியப் பொலிஸ் துறையில் ஐ.பி.எஸ் அதிகாரியாக இருந்துவிட்டு திடீரென அந்தப் பதவியை உதறினார். 'ஆடு வளர்க்கிறேன். ஐ.பி.எஸ் வருமானத்தை விட அதிகம் உழைக்கிறேன்' என பேட்டிகளும் கொடுத்தார். ஆனால் சில நாள்களில் பா.ஜ.கவில் இணைந்தார். இப்போது ஆடுகளையும் காணோம், அந்த இலட்ச ரூபா வருமானத்தையும் காணோம். இப்படி பலவித உருட்டல்களை வாய்கூசாமல் அடித்துவிடுகின்ற அண்ணாமலை வழக்கம்போல அண்மையில் 'ரபேல் விமானத்தைத் தயாரிக்கும் பாகங்களால் உருவான பல லட்சம் ரூபா பெறுமதியான கைக்கடிகாரத்தைக் கட்டியிருக்கிறேன்' என்று சொல்லி, பெரும் சர்ச்சையில் சிக்கினார். கடைசியில் தான் சொன்னது பொய் என்பதை ஒத்துக்கொள்ளாமல் ஏதேதோ கம்பிகட்டும் கதையெல்லாம் சொல்லி மழுப்பியிருந்தார். தமிழ்நாட்டில் வேகமறுத்த அவரது பருப்பை இங்கே பலாலியின் பேரால் வேகவைக்கப் பார்த்திருக்கிறார் அண்ணாமலை. ஆனால் அவரது துரதிர்ஷ்டமோ, என்னவோ இங்கும் அவரது பருப்பு வேகவில்லை. மாறாக இராமரின் பெயரைச் சொல்லி இப்படியெல்லாம் இஷ்டத்துக்கு வரலாற்றை வளைப்பவர்களா எமக்கு விடிவைத் தரப்போகிறார்கள் என்ற மனவேதனையில் தமிழ் மக்களை அண்ணாமலை வேகவைத்ததுதான் மிச்சம். மகாவம்சக் கதைகளின் புனைவுகளுக்கும், அண்ணாமலையின் புனைவுகளுக்கும் என்ன வித்தியாசம்? மகாவம்சப் புனைவுகளின் மாயையில் இருந்து மீளாததால் தான் இந்த நாடே இப்படி எரிந்து கொண்டிருக்கிறது. அந்த எரிவு போதாதென்று அண்ணாமலை வகையறாக்கள் கொண்டுவந்து கொட்டும் புதிய புனைவுகள் இந்த நாட்டை இன்னும் நாசமாக்குமே தவிர , விமோசனத்தைத் தராது. இனிமேல் யாழ்ப்பாணத்துக்கு வரும் எண்ணம் அண்ணாமலைக்கு இருந்தால், பின்வரும் குறளை ஒரு முறை அவர் படித்துவிட்டு வருவது நல்லது.

"எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"

**நாளொரு நல்வார்த்தை**

சட்டமும், விதிமுறைகளும் மக்களுக்காகவே உருவாக்கப்பட்டவை. சட்டத்துக்காகவும், விதிமுறைகளுக்காகவும் மக்கள் இல்லை. –காமராஜர்




அத்தியாவசியமற்ற

# சத்திர சிகிச்சைகளை ஒத்திவைக்க உத்தரவு!

## சுகாதார அமைச்சு விடுத்தது

கொழும்பு, பெப். 13

தவிர்க்க முடியாதவை தவிர்ந்த ஏனைய சத்திர சிகிச்சைகளை ஒத்திவைக்குமாறு அரச மருத்துவமனைகளுக்கு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

நாட்டில் முன்னெப்போதும் இல்லாத வகையில் சுகாதாரப் பெருநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

மருத்துவர்கள், தாதியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் போராட்டங்களை நடத்தியும், மருத்துவ அமைப்புக்கள் பலமுறை எச்சரித்தும் இன்னமும் இந்த மருத்துவ நெருக்கடி முடிவுக்கு வந்ததாக இல்லை.

இந்த நிலையில், நாடெங்கிலும் உள்ள அரச மருத்துவமனைகளில் தவிர்க்க முடியாதவை தவிர்ந்த இதர சத்திர சிகிச்சைகளை ஒத்திவைக்குமாறு சுகாதார அமைச்சு மருத்துவமனைகளுக்கு அறிவித்துள்ளது. (ம-6)

# 140 வகை மருந்துகள் கையிருப்பில் இல்லை!

## அரச மருத்துவ அதிகாரிகள் சுட்டிக்காட்டு

நாட்டில் 140க்கும் மேற்பட்ட அத்தியாவசிய மருந்து வகைகளின் கையிருப்புத் தீர்ந்துவிட்டது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்ததாவது:-

தேசிய மருத்துவமனைகள் முதல் கிராமிய மருத்துவமனைகள் வரையான கட்டமைப்பில் சுகாதார சேவைகளைப் பராமரிப்பது பெரும் சவாலாக உள்ளது. தற்போது 140 க்கும் மேற்பட்ட அத்தியாவசிய மருந்து வகைகளின் கையிருப்பு தீர்ந்துபோயுள்ளது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சால் கவனம் செலுத்தப்படவேண்டும்.

இதேவேளை இந்தியக் கடன் உதவியின் கீழ் இலங்கைக்கு கொண்டு வரப்படும் 80 சதவீத மருந்துகள் இன்னமும் பதிவு செய்யப்படவில்லை - என்றார். (ச-இ)

> "தேசிய மருத்துவமனைகள் முதல் கிராமிய மருத்துவமனைகள் வரையான மருத்துவமனை கட்டமைப்பில் சுகாதார சேவைகளை பராமரிப்பது பெரும் சவாலாக உள்ளது."

**நாளை**

14.02.2023
செவ்வாய்க்கிழமை
மாசி 02

சுபநேரம் : 11.03 - 12.33
ராகுகாலம் : 03.33 - 05.03
உலக காதலர் தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லுக்கு நிர்ணய விலை: போராட்டத்தில் விவசாயிகள்

வவுனியா, பெப். 13

நெல்லுக்கு நிர்ணய விலையை வழங்கவேண்டும் என்று வலியுறுத்தி, வவுனியா விவசாயிகளால் போராட்டமொன்று நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

வங்கக்கடலில் ஏற்பட்ட காற்ற ழுத்தத் தாழ்வுநிலையால் கடந்த வாரம் இரண்டு நாள்கள் வவுனியாவில் கடும் மழையும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளப் பெருக்காலும் பலநூறு ஹெக்ரேயர் நெற்பயிர்கள் அழிவடைந்தன. அரசாங்கம் நெல்லுக்கு இதுவரை நிர்ணய விலையும் வழங்கவில்லை. இதனால், நியாயமான கேள்வி இல்லாமலும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இந்த நிலையைக் கருத்திற்கொண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியே விவசாயிகள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'பயிர் அழிவுக்கான இழப்பீட்டை வழங்குங்கள்', 'விவசாயிகளின் நாளைய எதிர்காலத்துக்கு வழியை ஏற்படுத்துங்கள்', 'நெல்லுக்கான உத்தரவாத விலையை வழங்குக' உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.



வவுனியா தாண்டிக்குளம் விவசாயக் கல்லூரிக்கு முன்பாக ஆரம்பித்த இந்த ஆர்ப்பாட்டப் பேரணி ஏ-9 வீதியூடாக வவுனியா மாவட்டச் செயலகத்தை சென்றடைந்தது. அங்கு வவுனியா மாவட்டச் செயலர் பீ.ஏ.சரத்சந்திரவிடம் மனுவொன்றையும் விவசாயிகள் கையளித்தனர். (ச-110)



# ஒரு கிலோ நெல் ரூ.100

*கிளிநொச்சி விவசாயிகளுக்கு ஜனாதிபதி ரணில் உறுதி*

கிளிநொச்சி, பெப். 13

கிளிநொச்சி விவசாயிகளிடமிருந்து ஒரு கிலோ நெல்லை நூறு ரூபா வீதம் கொள்வனவு செய்வதற்கான திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அண்மையில் கிளிநொச்சி - முல்லைத்தீவு விவசாயிகள் நெல்லுக்கு உத்தரவாத விலையை நிர்ணயிக்குமாறு அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். இதையடுத்தே ஒரு கிலா நெல்லை 100 ரூபாவுக்குக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-6)

## வடக்கில் இன்று சீரான வானிலை

யாழ்ப்பாணம், பெப். 13

வடக்கு மாகாணத்தில் இன்று சீரான வானிலை நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

மத்திய மாகாணத்திலும் பதுளை, இரத்தினபுரி, காலி, மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் பிற்பகல் அல்லது இரவு வேளைகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும். அதேவேளை நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சீரான வானிலை நிலவும்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20-30 கிலோமீற்றர் வரை காணப்படலாம்.

மன்னாரில் இருந்து புத்தளம் ஊடாக கொழும்பு வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும், மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகம் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-45 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கலாம் - என்றுள்ளது. (ம)



*காட்டுயானை உயிரிழப்பு*

## மின்சார வேலியை அமைத்தவருக்கு ரூ.2 லட்சம் தண்டம் விதித்தது மன்று

முல்லைத்தீவு, பெப். 13

பண்ணையொன்றின் மின்சார வேலியில் அகப்பட்டு உயிரிழந்த காட்டு யானை தொடர்பான வழக்கில், பண்ணையின் உரிமையாளரான பெண்ணுக்கு 2 லட்சம் ரூபா தண்டப்பணம் விதித்து நீதிமன்று உத்தரவிட்டது.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஒதியமலையிலுள்ள பண்ணையொன்றின் மின்சார வேலியில் சிக்கி காட்டு யானை உயிரிழந்தது. இதையடுத்து பண்ணையின் உரிமையாளர் வன உயிரிகள் திணைக்களத்தால் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். வழக்கு விசாரணைகளின் அடிப்படையில் பண்ணையின் உரிமையாளர் குற்றவாளியாக இனங்காணப்பட்டு அவருக்கு நீதிமன்றம் 2 லட்சம் ரூபா தண்டம் விதித்தது. (ச-19)



## சந்தையில் குளவிக்கூடு அச்சத்தில் வியாபாரிகள்

கிளிநொச்சி, பெப். 13

கிளிநொச்சி - விசுவமடு சந்தைப் பகுதியிலுள்ள பனைமரம் ஒன்றில் பெரிய குளவிக்கூடு ஒன்று நீண்டகாலமாகக் காணப்படுவதால் அச்சத்தின் மத்தியிலேயே வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது என வியாபாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சந்தையின் உட்புறப் பகுதியில் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முதியவர்கள், சிறுவர்கள் எனப் பலரும் இதனால் அசௌகரியங்களுக்குள்ளாக நேரிடுகின்றது.

இதனை அகற்றித்தருமாறு உரிய அதிகாரிகளிடம் தெரிவித்தபோதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, இதுதொடர்பில் புதுக்குடியிருப்பு பிரதேசசபையினர் கவனத்திற்கொண்டு குளவிக் கூட்டை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-113)

## உயிர்கொல்லி ஹெரோய்னுடன் கைதானவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், பெப். 13

புன்னாலைக்கட்டுவன் அச்செழுப் பகுதியில் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய அண்மையில் இந்தக் கைது இடம்பெற்றது. சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முற்படுத்திய நிலையில் எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ச-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி மங்கையற்கரசி முத்துக்குமாரசுவாமி

யாழ். சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Brampton ஐ வசிப்பிடமாகவும் கொண்ட மங்கையற்கரசி முத்துக்குமாரசுவாமி கடந்த (10-02-2023) வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா உடையார் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சின்னையா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முத்துக்குமாரசுவாமி அவர்களின் அன்பு மனைவியும், சிறீகாந்தா, ரவீந்திரா, சுபோதினி, தாரகன், சுதர்சன் ஆகியோரின் அன்புத் தாயாரும், விமலா, சுபத்திரா, தயானந்தா, நந்தினி, வசந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சண்முகசுந்தரம், இராஜரட்ணம் மற்றும் செல்வபாக்கியம் (ஐக்கிய அமெரிக்கா), Dr. கதிர்காமத்தம்பி (பிரித்தானியா), Dr. இராமச்சந்திரன் (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், Dr. சகுந்தலை, மாணிக்கவாசகர் ஆகியோரின் சிறிய தாயாரும், கபிலன், அபிராமி ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், சிவமயூரன், காயத்திரி, கௌதமி, ஜனகன், கவிந்தன், லக்ஸ்மன், ஹரிணி ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.02.2022) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் கனடாவில் இடம்பெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

தொடர்புகளுக்கு :
சுபோ (மகள் - கனடா) - Mobile : +164 740 11081
தாரா (மகன் - கனடா) - Mobile : +164 758 89542
சுதா (மகன் - கனடா) - Mobile : +141 6567 6209
நித்தியானந்தா மனுநீதி (பேரமகன்) - +94 77 621 7550

தகவல்:
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டில் நீள நினைந்துருகல்

தோற்றம்
18 . 06 . 1938



மறைவு
24 . 02 . 2022

## அமரர் கனகர் இராசையா


*திதி: அட்டமி : (13.02.2023)*

நீங்கள் எம்மிடமிருந்து விடைபெற்று
ஒரு வருடம் கடக்கிறது!
வயல் நிலங்களும் கோவில் வீதிகளும்
மழைகாலக் குளிரும் கோடைகால வெப்பமும்
வசந்த காலத் தளிரும் மலரும் கனியும்
விளையும் பயிரும் உழைப்பும் வாழ்வும்
என்றும் எங்கள் வீடும்
உங்களையே மீண்டும் மீண்டும்
நினைவில் தரும் ! - ஏனெனில்
அவற்றில் நீங்கள் நீங்காமல்
நிரந்தரமாய் வாழ்கின்றீர்கள்!
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

புளியந்தோட்டம்,
ஐயனார் கோயிலடி, சுன்னாகம்.

நினைந்துருகும்.....
குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
21.10.1955



மறைவு
24.02.2022

## அமரர் இராஜபட்சம் விஸ்வபட்சம்

(முன்னாள் முகாரி - கனரகவாகன பராமரிப்புப் பகுதி - லங்கா சிமெண்ட் நிறுவனம், காங்கேசன்துறை)

**திதி: 13.02.2023**

பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய்,
- வாழ்வின் வழிகாட்டியாய்
வாழ்ந்த எங்கள் குடும்ப தலைவர் எம்மை பிரிந்து
- ஓராண்டு கழிந்து விட்டது

பல ஆண்டுகள் கழிந்தாலும் **உங்கள் நினைவுகளுடன் வாழும் அன்பு மனைவி, சகோதர சகோதரிகள், பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர்கள்.**

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் பிரார்த்திப்போமாக!

**மூளாய், யாழ்ப்பாணம்,**
**மூளாய் கிழக்கு, சுழிபுரம்.**

**மனைவி, பிள்ளைகள்.**

(cs.49056) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துருக்கி பூகம்பத்தில்

## காணாமற்போயிருந்த சந்திரிகா சாவு!

கொழும்பு, பெப். 13

துருக்கி மற்றும் சிரியாவில் ஏற்பட்ட பூகம்பத்தில் காணாமற்போன இலங்கைப் பெண் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

சந்திரிகா ராஜபக்ச (வயது-69) என்ற அந்தப் பெண் தங்கியிருந்த கட்டடமும் நிலஅதிர்வில் சிக்கியிருந்த நிலையில், அவர் காணாமற்போயிருந்தார். இந்தநிலையில் சுமார் மூன்று நாள்கள் தேடுதலுக்குப் பின்னர் அவர் கட்டட இடிபாடுகளுக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 20 வருடங்களாக அவர் துருக்கியில் வசித்து வந்துள்ளார். (ச-இ)

துருக்கி நிலநடுக்கம்

## உயிரிழந்தவர்களுக்கு வவுனியாவில் அஞ்சலி!

வவுனியா,பெப்.13

துருக்கி மற்றும் சிரியாவில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

'தமிழ் விருட்சம்' அமைப்பின் தலைவர் ச.கண்ணன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. உயிரிழந்தோருக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு மெழுவர்த்தி ஏற்றி அஞ்சலிக்கப்பட்டது.



நிகழ்வில் 'எம்.ஜி.ஆர்.' நற்பணிமன்றத்தின் தலைவர் கோ.சிறிஸ்கந்தராஜா, நகரசபை முன்னாள் உறுப்பினர்களான ரி.கே.ராஜலிங்கம், சு.குமாரசாமி, சமூக ஆர்வலர்கள், அரசியல் பிரமுகர், பொதுமக்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். (ச-110)


### குத்தகைக்கு தேவை

வான்கள், கார்கள் குத்தகைக்கு தேவை. தகுந்த கூலி வழங்கப்படும்.

077 489 1279



### பெயர் மாற்றம்

இல.7, குகன் வீதி, அரியாலையில் வசிக்கும் **பரானந்தா சாந்திநிகேதன்** ஆகிய நான் எனது பெயரை **பரானந்தா நிகேதன்** என மாற்றம் செய்துவதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **பரானந்தா நிகேதன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

(cs/23477) (2.6) **பரானந்தா நிகேதன்**


டொலர் நெருக்கடி

## பொலிஸ் குதிரைகளுக்கு இனி உள்ளூர் உணவு!

கொழும்பு, பெப். 13



பொலிஸ் குதிரைப் படைப்பிரிவின் குதிரைகளுக்கு உணவாக உள்ளூர்த் தானியங்களை அளிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடி காரணமாக குதிரைகளுக்குத் தேவையான உணவை இறக்குமதிசெய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குதிரைகளுக்குத் தேவையான உணவை இறக்குமதி செய்ய இயலாமையால் குதிரைகளின் எடையில் மாற்றம் ஏற்படுகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டது. அதன்காரணமாக குதிரைகளுக்கு உள்ளூர்த் தானியங்களை வழங்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளன. இதையடுத்தே இந்த நடைமுறையைப் பின்பற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பச்சைப்பயறு, கொண்டைக்கடலை மற்றும் சோளம் போன்ற உள்ளூர்த் தானியங்களைப் படைப்பிரிவின் குதிரைகளுக்கு அளிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்தப் புதிய வேலைத்திட்டத்தினூடாக குதிரைகளின் எடையில் ஒரு தெளிவான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என குதிரைப்படைப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)


### சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்

எமது கல்லூரியில் அளப்பரிய சேவையாற்றி இன்று (13.02.2023) ஓய்வுபெறும் அதிபர்

**திருமதி அனந்தஈஸ்வரி இராசரத்தினம்**

(இ.அ.சே. தரம் 1- கல்விமாணி)




அவர்களை தமது ஓய்வுகாலத்தில் சகல நலன்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
சேவையாளர் சங்கம்
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி



உ
ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

### மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25 . 07 . 1935 | 11 . 02 . 2023 |



**திரு. சின்னையா சிவசுந்தரம்**
**(சுந்தரம் பத்தர்)**

தண்ணீரூற்று முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவசுந்தரம் 11.02.2023 அன்று யாழ்ப்பாணம் கொக்குவிலில் சிவபதமடைந்தார்.

அன்னாரின் பூவுடல் இல.38, மகாத்மாகாந்தி வீதி, யாழ்ப்பாணம் (Jetwing Hotel, Jaffna ற்கு முன்பாக) உள்ள பப்பாச்சி அந்தியாகல சேவை மலர்ச்சாலையில் 16.02.2023 வியாழக்கிழமை வரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

**கருவேலடி ஒழுங்கை,**
**கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்**

**T.P.: 077 907 4670 - மகள் (யாழ்ப்பாணம்)**
**+417 683 17653 - மகன் (சுவிஸ்)**

(cs/23407) (2.6)



### மரண அறிவித்தல்



**கந்தவனம் அரியதாஸ்**
**(ஓய்வு பெற்ற பிரதி அதிபர்- யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்)**

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியை வசிப்பிடமாக கொண்ட கந்தவனம் அரியதாஸ் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர்-யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்) அவர்கள் நேற்று முன்தினம் (11.02.2023) அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம் சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் ரோசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும் அஜித்தா (ஆசிரியர் யா/சென். ஜேம்ஸ் மகளிர் கல்லூரி), தேவானந் ( Youth For Christ - யாழ்ப்பாணம்), மதனிக்கா (France) ஆகியோரின் அன்பு தந்தையும், அருட்திரு. டானியல் ரஞ்சித் (உடுவில் CACM திருச்சபை), றொஷானி (அபிவிருத்தி உத்தியோகத்தர்), ரவீந்திரன் (France) ஆகியோரின் அன்பு மாமனாரும், டான் அபினாஷ், டிவைனி, டெவன்சி, ரவீன், டெரினா ஆகியோரின் அன்பு பேரனும், அரியநாயகம், அரியசோதி, அரியசிங்கம், அருள்மலர், அரியஜெயம், அரியதேவி, அரியதுரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (13.02.2023) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் மட்டுவில் தெற்கு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மட்டுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இராணி பவனம்,**
**மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.**

**தகவல் : குடும்பத்தினர்.**
**077 444 1181**
**077 730 2072**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கி நிலநடுக்கம் சாவு 30,000!



அங்கரா, பெப். 13

துருக்கி சிரிய எல்லைப் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.





துருக்கி - சிரியா எல்லையோர நகரங்களில் கடந்த 6ஆம் திகதி அதிகாலை அடுத்தடுத்து ஏற்பட்ட இரண்டு பெரும் பூகம்பங்களாலும் அதனைத் தொடர்ந்து தொடர்ச்சியாக ஏற்பட்ட 400 சிறு நில நடுக்கங்களாலும் குறித்த பகுதியே சின்னாபின்னமானது. சுமார் 6 ஆயிரம் கட்டடங்கள் உடைந்து விழுந்தன. கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நேற்றுக் காலை வரையான நிலவரங்களின் அடிப்படையில் 30 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

சுமார் 60 ஆயிரம் பேர் காயமடைந்துள்ளனர். அவர்களில் நூற்றுக்கணக்கானவர்களின் நிலைமை கவலைக்கிடம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கட்டட இடிபாடுகளில் 65 வீதமானவையே இதுவரை மீட்கப்பட்டுள்ளது. இவற்றின் அடிப்படையில் உயிரிழப்பு எண்ணிக்கை இன்னுமின்னும் அதிகரிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடும் குளிர் மற்றும் சேதமடைந்த சாலைகள் போன்ற காரணங்களால் மீட்புப் பணி கடும் சவாலாக உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**போர் நிறுத்தம்**

நிலநடுக்கம் ஏற்பட்ட சிரியப் பகுதி கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் வருகின்றது. அங்கு தற்போதும் உள்நாட்டுப் போர் இடம்பெற்று வருகின்றது. நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான உதவிகளை எளிதில் வழங்குவதற்காக சிரியாவில் உடனடியாக போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என ஐ.நா. வலியுறுத்தி உள்ளது. கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு சர்வதேச உதவிகளை வழங்குவதற்கு சிரிய அரசும் ஒப்புதல் அளித்துள்ளது. (ம)



## துருக்கியில் மீட்புப் பணி

# வைட் ஹெல்மட்ஸுக்கு குவிகின்றது பாராட்டு!

அங்கரா, பெப். 13

துருக்கி மற்றும் சிரிய எல்லையில் இடம்பெற்ற பூகம்பத்தால் உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களை மீட்கும் பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ள வைட் ஹெல்மட்ஸ் அமைப்புக்கு உலகின் பல பாகங்களில் இருந்தும் பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

சிரியாவில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரில் குண்டுவீச்சுகள் மத்தியில் தம் உயிரைத் துச்சமாகக் கருதி மீட்புப் பணியில் ஈடுபட்ட அமைப்புத்தான் இந்த வைட் ஹெல்மட்ஸ். சிரிய அதிபர் அல் அசாத்தின் போர்க்குற்றத்தையும் இந்த அமைப்பினரே வெளிப்படுத்தினர். இந்த நிலையில், துருக்கி கட்டட இடிபாடுகளிலும் தற்போது வைட் ஹெல்மட்ஸ் அமைப்பு கடுமையாகப் பணி செய்து வருகின்றது. இதற்காகவே அந்த அமைப்புக்குப் பாராட்டுக்கள் குவிந்த வண்ணமுள்ளன.

தலையில் வெள்ளைத் தலைக்கவசம் அணிந்து பணிபுரிவதால் இவர்கள் வைட் ஹெல்மட்ஸ் என்று அழைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# சிரிய இடிபாடுகளுக்குள் அதிசயக்குழந்தை 'அயா'!

டமஸ்கஸ், பெப். 13

துருக்கி - சிரிய நாடுகளில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பல்லாயிரம் பேர் உயிரிழந்துள்ள நிலையில், கட்டட இடிபாடுகளுக்குள் தொப்புள் கொடியுடன் ஒரு குழந்தை மீட்கப்பட்டுள்ளது. அந்தக் குழந்தைக்குப் பெயர் அயா.



சிரியப் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உயிரிழந்த கர்ப்பிணிப் பெண்ணொருவர் இந்தக் குழந்தையைப் பிரசவித்துவிட்டுப் பின்னர் உயிரிழந்துள்ளார். 90 மணித்தியால நீண்ட போராட்டத்தின் பின்னர் அந்தக் குழந்தை மீட்கப்பட்டு உச்சக்கட்ட மருத்துவப் பராமரிப்பின் பின்னர் உடல்நலம் தேறியுள்ளது. அந்தக் குழந்தைக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் 'அயா' என்று குழந்தைக்குப் பெயரிட்டுள்ளார். 'அயா' என்றால் அதிசயம் என்று பொருள். பல்லாயிரம் பேர் உயிரிழந்த நிலநடுக்கத்துக்குள் உயிருடன் மீட்டு வந்ததால் இந்தப் பெயர் அந்தக் குழந்தைக்கு வைக்கப்பட்டுள்ளது.

குழந்தையை தத்தெடுத்து வளர்ப்பதற்காக பலநூறு பேர் விண்ணப்பித்துள்ளனர். (ம)

# சூரியனின் மேற்பரப்பில் ஒருபகுதி உடைவு விஞ்ஞானிகள் குழுவின் பரபரப்புத் தகவல்

வொஷிங்டன், பெப். 13

சூரியனின் மேற்பரப்பில் ஒருபகுதி உடைந்துள்ளது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



சூரியக் குடும்பத்தில் உள்ள கோள்கள் மற்றும் வால் நட்சத்திரங்கள் பற்றி விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தி வருகிறார்கள். விண்வெளியில் நிகழும் மாற்றங்கள், நிகழ்வுகள் ஆகியவற்றை கண்காணித்து வருகிறார்கள். இதுதொடர்பாக ஆய்வு முடிவுகளை விஞ்ஞானிகள் வெளியிட்டு வருகிறார்கள். சூரியனையும் விஞ்ஞானிகள் தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறார்கள். சூரியனிலிருந்து வெளியேறும் காந்தப் புயல் உள்ளிட்டவற்றை கண்காணிக்கிறார்கள். இந்த நிலையில் சூரியனின் மேற்பரப்பில் ஒரு பகுதி உடைந்ததாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். சூரியனின் மேற்பரப்பிலிருந்து ஒரு பெரிய துண்டு உடைந்துள்ளதாகவும் அது சூரியனின் வடதுருவத்தில் ஒரு பெரிய நெருப்புப் புயலைப் போல சுற்றி வருவதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இது எப்படி நிகழ்ந்தது என்று விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தி வருகிறார்கள். சூரியனின் மேற்பரப்பில் ஒரு பகுதி உடைந்த நிகழ்வை அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியில் பதிவு செய்துள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.சுவாமிநாதன்
ஆசிரியர்
யா/வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை



சர்வதேச வானொலி தினம் இன்றாகும். இதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

# எதிரொலி கேட்டான் வானொலி படைத்தான்

இன்று உலக வானொலி தினமாகும். ஆண்டுதோறும் பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி சர்வதேச வானொலி தினம் கொண்டாடப்படுகிறது.

'யுனெஸ்கோ' நிறுவனம் ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி மாதம் 13ஆம் திகதியை சர்வதேச வானொலி தினமாகப் பிரகடனப்படுத்தி கொண்டாடுவது சிறப்பான அம்சமாகும். இதன்மூலம் வானொலி ஒலிபரப்பு சேவையை கொண்டாடவும் சர்வதேச வானொலி கலைஞர் களிடையே கூட்டுறவை ஏற்படுத்திக்கொள்ளவும், சமூக வானொலிகள் மூலமாக தகவல்கள் பரிமாறுவதை ஊக்குவிக்கவும் இந்தநாள் கொண்டாடப்படுகின்றது.
இன்றைய நவீன உலகில் இணையம், ருவிற்றர், வட்சப், வைபர், பேஸ்புக், தொலைக்காட்சி, ஈமெயில் என இவை எல்லாம் வந்தபோதும் மக்களிடையே உயிர்ப்புடன் வாழ்ந்து வருமொன்று வானொலி எனக்கூறுவது நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ளவேண்டிய ஒன்றாகும். இதன் முக்கியத்துவம் அறிந்து முதலாவது உலக வானொலி தினம் 2012ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி இத்தாலி நாட்டில் அமைந்துள்ள பீஸா பல்கலைக்கழகத்தில் உத்தியோகபூர்வமாக கொண்டாடப்பட்டது. அன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி உலக வானொலி தினமாக கொண்டாடப்படுவதோடு அந்தத் தினத்துக்கான தொனிப்பொருளும் ஆண்டுதோறும் அறிவிக்கப்படுகிறது.
வானொலியானது மனித இனத்தின் அனைத்து நிலைகளிலும் தன்மையிலும் கேட்பதற்கேற்ற சக்திவாய்ந்த ஊடகமாக காணப்படுகின்றது. மக்களிடையே ஜனநாயகக் கருத்துக்கள் சென்றடைய வேண்டுமென்பதே இதன் பிரதான நோக்கமாக அமைகிறது.

## இந்தவருடத் தொனிப்பொருள்

2023ஆம் ஆண்டு இந்த வருடத்துக்கான உலக வானொலி தினத்தின் தொனிப்பொருள் 'வானொலியும் அமைதியும்' என்றவாறாக அமைந்துள்ளது. அதாவது சுதந்திரமான வானொலி எப்பொழுதும் அமைதியும் ஸ்திரத்தன்மையும் ஒருங்கிணைந்த ஒன்றாகப் பார்க்கப்படுவதுடன் சுதந்திரமான வானொலி மோதலைத் தடுப்பது மற்றும் அமைதியைக் கட்டியெழுப்பும் ஒரு உயர்ந்த தூணாக இருக்கின்றது என்பதற்காக இந்தத் தொனிப்பொருள் வைக்கப்பட்டிருக்கின்றது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஊடகங்களால் வெளியிடப்படும் கருத்துக்கள் சில சந்தர்ப்பத்தில் பாதகமான விளைவுகளையும் முரண்பாடு, அச்சம், தேவையற்ற நிலைமை என்பவற்றை தோற்றுவிக்கலாம். எனவே பொறுப்பு வாய்ந்த சமூக ஊடகமாக செயற்படுவதன் அவசியம் இந்தத் தொனிப்பொருளால் வலியுறுத்தப்படுகிறது.

## அனைவருக்குமானது

வானொலியானது செவிப்புல சாதனமாகக் காணப் படுவதனால் எழுத்தறிவு இல்லாதவர்களும் கேட்டு விளங்கிக்கொள்ளக்கூடிய ஊடகமாக அமைகிறது. போர்க்காலங்கள், இனமோதல்கள், இயற்கை இடர்கள் நிகழும் காலங்களில் வதந்திகள், பொய்ப் பரப்புரைகள் என்பன பரவலாக இடம்பெறுவது வழமை.
இவ்வாறான தருணத்தில் உண்மையான நம்பகத்தன்மையான செய்திகளை பெற்றுக்கொள்ள மக்கள் வானொலி போன்ற ஊடகங்களை நாடுகின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இணையம், பேஸ்புக், வட்சப், வைபர் போன்றவற்றின் தொடர்புகள் துண்டிக்கப்படலாம் அல்லது வன்முறைச் சம்பவங்களின்போது அரசினாலேயே இவற்றுக்கு குறுகியகால தடைவிதிக்கும்போது பாதுகாப்பான இடத்தை நாடுதல், தேவையான உதவிகளைப் பெற்றுக்கொள்ளல், உடனுக்குடன் செய்திகளை பெற்றுக்கொள்ளவென வானொலியையே மக்கள் நாடுகின்றனர். மேலும் வானொலி மூலமான கல்விச் சேவையும் குறிப்பிடத்தக்கது. வளப்பற்றாக்குறையான பிரதேச மாணவர்களுக்கு வேண்டிய கல்வி, கல்விச் சேவை நிகழ்வு மூலம் கல்வி போதிக்கப்பட்டு வருகின்றது.

## பணிகளோ ஏராளம்

கொவிட் காலத்தில் நாடு முடக்கப்பட்டிருந்த காலத்தில் இழந்த கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு மாணவர்களுக்கு ஊடகங்கள் வாயிலாக கல்வி போதிக்கப்பட்டது.
அதிலும் வானொலி மூலமான கல்வியை அநேக மாணவர்கள் கேட்டுப் பயன்பெற்றமை நாம் யாவரும் அறிந்ததே. அதேபோல் வளர்ந்தோர் கல்வி அதிகளவில் வானொலி மூலமாக இடம்பெற்று வருகின்றமையை அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் காணக்கூடியதாக வுள்ளது. பொழுதுபோக்கு நிகழ்வுக்காக அதிகளவில் மக்கள் வானொலியை நாடுகின்றனர். நீண்ட தூரப் பேருந்துப் பயணங்கள், மீனவப்படகுகள், குடிசைக்கைத் தொழில், உணவகங்கள், இரவுப்பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்கள், மகிழ்வு, பொழுதுபோக்கு, புத்துணர்வுக்காக வானொலி நிகழ்வுகளை அதிகளவு கேட்கின்றனர். குறிப்பாக இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் கணவன் வேலைக்குச் செல்ல, பிள்ளைகள் கல்வி கற்க அல்லது தொழிலுக்குச் செல்ல இல்லத்தரசிகள் தமது வீட்டுவேலையுடன் பொழுதுபோக்காக வானொலி கேட்பதை பழக்கமாகக் கொண்டுள்ளனர். இந்தவேளையில் கூடியளவு சமையல் முறைகள், அழகுக்கலை, பெண்கள் ஆரோக்கியம் போன்ற நிகழ்ச்சிகளைக் கேட்கின்றனர்.
வானொலி நிகழ்வில் சமயம்சார் நிகழ்ச்சிகளுக்கும் அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. மருத்துவம், விழிப்புணர்வு, உடல்உள ஆரோக்கியம் பற்றிய குறிப்புக்கள், துறைசார் வைத்தியநிபுணர்கள் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமோ நேயர்களுக்கு பல்வேறு தகவல்களை வழங்குவதில் வானொலியின் பங்கு அளப்பரியது. அத்தோடு டெங்கு, கொலரா, வைரஸ் காய்ச்சல், எய்ட்ஸ், புகைப்பிடித்தல், மதுபானம் அருந்துதல், போதைப்பொருள் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாத்தல், கட்டாயக்கல்வியை வழங்கல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை வழங்குவதில் வானொலியின் பங்கு அளப்பரியது. முறையற்ற சட்டவிரோதமான வெளிநாட்டுப் பயணங்களின் பாதிப்புக்கள் தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு வழங்குவதிலும் வானொலி அரும்பங்காற்றுகின்றது. மக்களின் தேவைகள், மக்களின் குறைகள் போன்றவற்றை வெளி உலகுக்கு வெளிக்கொணர்தல் மற்றும் அவற்றுக்கு தீர்வு பெற்றுக்கொடுத்தல் போன்ற செயற்பாட்டிலும் வானொலியின் பங்கு குறிப்பிடத்தக்கது.
காலநிலை, செய்திகள், இடர் முன்னெச்சரிக்கை அறிவிப்புக்கள், அதாவது மழை, இடிமின்னல், வெள்ளம், மண்சரிவு, புயல், கடற்கொந்தளிப்பு, சுனாமி போன்ற நிலைமைகளில் உடனடியாக மக்களுக்கு தமது நிகழ்ச்சிகள் மூலம் முற்பாதுகாப்பு எச்சரிக்கைகள் போன்றவற்றை வழங்குவதில் வானொலி முக்கியம் பெறுகின்றது.
பண்பாட்டு கலாசார விழுமியங்களை எடுத்துச்சொல்வதாகவும் அடுத்த சந்ததிக்கு தெரிவிப்பதிலும் வானொலியின் பங்கு தவிர்க்க முடியாததாகக் காணப்படுகின்றது. ஓர் இனம் தமது வரலாற்றினையும் அதேபோல பிறரது வரலாற்றினையும் அறிந்திருக்கவேண்டியது அவசியம். அந்தவகையில் நேயர்களுக்கு உரிய வேளைகளில் வரலாறுகளை எடுத்துக்கூறுவதில் வானொலியின் பங்கு அளப்பரியதாகக் காணப்படுகின்றது. தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் நடைபெறுகின்ற பல்வேறு போட்டி களை பல்வேறு நிலைமைகளின் காரணமாக சென்று பார்க்கமுடியாத நேயர்களுக்கு உரிய வர்ணணைகள் மூலம் நேரடியாகவே போட்டிகளைப் பார்க்கின்ற உணர்வு போல அவற்றை நேர்முக வர்ணனை செய்து விளையாட்டுச் செய்திகளைத் தெரிவிப்பதில் வானொலியின் பங்கு குறிப்பிடத்தக்கது. மக்களை சமூகமயமாக்குவதில் ஊடகங்களின் பங்கு அளப்பரியதாக இருக்கின்ற போதும் அதில் கூடியளவு பங்கினை வானொலி பெற்றுள்ளமையை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டியதாகவுள்ளது. இவ்வாறான பல சிறப்பம் பங்கள் காரணமாகவே சர்வதேச ரீதியில் இன்றைய தினம் அனைவரினாலும் நினைவுகூரப்படு கின்றமை முக்கியமான விடயமாகும்.

## 15 வயதுச்...

சந்தேகநபரான சகோதரன் கைது செய்யப்பட்டுள்ளான்.
இந்தச் சகோதரர்களின் தந்தை தவறான முடிவு எடுத்து உயிரிழந்திருந்த நிலையில் தாய் மறுமணம் செய்துள்ளார். இந்த நிலையில் பாதிக்கப்பட்ட 13 வயதுச் சிறுமி, சந்தேகநபராகக் கைதாகியுள்ள 15 வயதுச் சிறுவன் மற்றுமொரு சகோதரர் ஆகிய மூவரும் தமது அம்மம்மாவுடனேயே தங்கியிருந்துள்ளனர்.
12 வயதில் சிறுமி பருவமடைந்ததைத் தொடர்ந்து சிறுவன், தனது சகோதரியை பாலியல்வன்புணர்வு உட்படுத்தி வந்துள்ளார். கடந்த ஓராண்டாக இவ்வாறு இடம்பெற்று வந்த நிலையில், இந்தக் கொடுமையைத் தாங்காது 13 வயதுச் சிறுமி தூக்க மாத்திரைகளை அருந்தி தவறான முடிவு எடுத்து உயிரைமாய்க்க முற்பட்டுள்ளார். அவரை உறவினர்கள் காப்பாற்றி மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.
மருத்துவமனையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளிலேயே சிறுமி தொடர்ச்சியாக வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது. இதனையடுத்து சகோதரன் கைது செய்யப்பட்டுள்ளான். சிறுமி பாதுகாப்பாக சிறுவர் இல்லம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.
(அ-ஓ-5)


# மரண அறிவித்தல்

தோற்றம்
31 . 10 . 1940



மறைவு
12 . 02 . 2023

## சரவணமுத்து பாலசுப்பிரமணியம்

மாதகலைச் சேர்ந்த Singapore ஐ பிறப்பிடமாகவும் வவுனியா, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (12.02.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான சிவகுரு, பரஞ்சோதி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், தயாபரன் (Dubai) இன் அன்புத் தந்தையும், ஜயந்தியின் (Canada) பாசமிகு மாமனாரும், திலக்ஷனின் (Canada) அன்புப் பேரனும், காலஞ்சென்ற தணிகாசலம், பரராஜசிங்கம் (America) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற நாகபூசணி மற்றும் விஜயா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள ஈசன் மலர் சாலையில் நாளை (14.02.2023) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொ.பே.இல:. 077 304 4212
072 403 6422 (Whatsapp)
+971526396467

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 39243)1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13ஐ...

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இந்திய இணை அமைச்சர் எல்.முருகன் மற்றும் பா.ஜ.க. தமிழகத் தலைவர் அண்ணாமலை ஆகியோர் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் சமூகங்களின் பிரதிநிதிகள் ஆகியோரை இராப்போசன விருந்துடன் யாழ். நகரிலுள்ள ஹோட்டலில் கடந்த சனிக்கிழமை சந்தித்தனர். இந்தச் சந்திப்பின்போதே, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாக தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் மேற்படி கோரிக்கையை முன்வைத்தனர்.

'13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு எல்.முருகன், அண்ணாமலை உள்ளிட்ட சிலர் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் கோரியிருந்தனர். அவ்வாறு கோரிக்கை வைப்பதன் ஊடாக மாத்திரம் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்தமுடியாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்றால், இலங்கைத் தமிழர்கள், இலங்கை அரசாங்கம், இந்திய அரசாங்கம் என்ற முத்தரப்பு பொறிமுறை உருவாக்கப்படவேண்டும். அதை இந்திய அரசாங்கம் செய்யவேண்டும்' என்ற கோரிக்கையை முன்வைத்ததாக சுரேஷ் பிரேமச்சந்திரன் 'உதயன் பத்திரிகையிடம்' தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை ஒழுங்கமைத்துத்தருமாறு இந்தச் சந்திப்பில் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை முன்வைத்தார். (அ-ஒ-5)

## தோணி...

பரிதாபமாக உயிரிழந்தனர். அவர்களைக் காப்பாற்ற முயன்ற தனியார் கல்விநிலைய ஆசிரியரும் இதன்போது உயிரிழந்துள்ளார்.

களுமுந்தன்வெளி கஜமுகன் கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் ஆசிரியர்களும், இம்முறை கல்வி பொதுத் தராதர சாதாரண தரம் எழுதவிருக்கும் மாணவர்களும், தாந்தாமலைப் பகுதியில் அமைந்துள்ள நாற்பதுவட்டைக் குளம் அமைந்துள்ள பகுதிக்கு நேற்று சுற்றுலா சென்றுள்ளனர்.

ஆசிரியர்களும், மாணவர்களும் ஒன்றிணைந்து மதிய உணவை சமைத்து உண்டுள்ளனர். பின்னர் 3 ஆண் மாணவர்கள் அங்கிருந்த குளத்தின் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தோணியை எடுத்துக்கொண்டு குளத்துக்குள் சென்றுள்ளனர். தோணி குளத்தின் நடுப்பகுதிக்குச் சென்றபோது தோணியிலிருந்த துவாரத்தின் வழியே நீர் தோணியை நிரப்பியுள்ளது. அதில் பயணித்த மாணவர்கள் கூக்குரலிட்டு சத்தமிட்டுள்ளனர். இந்நிலையில் ஆசிரியர் குளத்தில் நீந்திச் சென்று மாணவர்களைக் காப்பாற்ற முயன்றுள்ளார்.

இச்சந்தர்ப்பத்திலேயே தோணி குளத்துக்குள் மூழ்கியதில் இவ்வனர்த்தம் இடம்பெற்று 4 பேரும் மிகவும் பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளனர். தனியார் கல்வி நிலையத்தின் ஆசிரியரான 27 வயதுடைய யோ.கிவேதன், 16 வயதுடைய மாணவர்களான தயாபரன் சஜிதன், சத்தியசீலன் தனு, வீரசிங்கம் விதுசன் ஆகியோரே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். (அ-ஒ-இ)

## கணவனின்...

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணம், 3ஆம் குறுக்குத் தெருவில் நடந்துள்ளது. செல்வதயாளரூபன் நாகராணி (வயது-61) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இவரது கணவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார். அந்தச் செய்தியை தொலைபேசி ஊடாக அறிந்த மனைவி தவறான முடிவெடுத்து தனக்குத் தானே தீ மூட்டிக் கொண்டுள்ளார்.

இவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி நேற்று இரவு உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ஒ-26)

## மதிலுடன்...

குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு, மாளிகாவத்தையைச் சேர்ந்த பழனி கணேசதாசன் (வயது-63) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவர் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் மேசன் வேலைக்காகத் தங்கியிருந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் பின்னிருக்கையில் இருந்து பயணித்தபோது மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மதிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், பழனி கணேசதாசன் நேற்றுமுன்தினம் இரவு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ஒ-26)

## 'விலங்கு...

பூங்கா பணிப்பாளர் நாயகம் திலக் பிரேமகாந்த தெரிவித்தார்.

'காதலர் தினத்தை முன்னிட்டு இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாகவும், விலங்குகளுக்கு அன்பும் கருணையும் அளிக்கும் நோக்கில் இந்த வாரம் செயற்படுத்தப்படுகிறது' என்றும் தெரிவித்தார்.

'விலங்கியல் பூங்காவுக்குச் சென்று செல்லப்பிராணிகளுடன் ஒளிப்படம் எடுக்கலாம். விலங்குகளுக்கு உணவளிக்கலாம் மற்றும் அவற்றுடன் நாள்களை செலவிடலாம். விலங்குகளுடன் ஒளிப்படம் எடுக்க தனிப்பகுதிகள் அமைக்கப்பட்டுள்ளன' என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-ஒ-6)

## இராமருக்கு...

வென்று நிகழ்வொன்றில் தெரிவித்த கருத்து பலத்த விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடந்த கம்பன் கழக விழாவில் கலந்துகொண்ட அண்ணாமலை அங்கு உரையாற்றினார்.

நாம் 'தலைமன்னாருக்குச் சென்றிருந்தோம். இராமர் பாலத்துக்கு அருகே தங்கியிருந்தோம். 1983 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்ட கப்பல் சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக தூதரக அதிகாரிகளுடன் பேசிக் கொண்டிருந்தோம். எங்கு சென்றாலும் ஓரிடத்தில் சரித்திரம் இருக்கின்றது. இன்னொரு இடத்தில் இதிகாசம் இருக்கின்றது. பலாலி என்ற விமான நிலையத்தில் வந்து தரையிறங்கினோம். பலாலி என்று ஏன் பெயர் வரக் காரணம் என்று பார்ப்போமானால், இராமர் இங்கு வந்த இறங்கியபோது இராமருக்கு இங்கு பாலாலயம் (குடமுழுக்கு) நடத்தப்பட்டது. அதிலிருந்து வந்த பெயர்தான் பலாலி. அங்குதான் தற்போது அதிகமான தமிழர்கள் வந்திறங்கும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது' என்று தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

அவரது இந்தக் கருத்து பல்வேறு விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. சமூக வலைத்தளங்களில் இது தொடர்பாகவிமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. எந்தவித ஆதாரமும் இன்றி எழுந்தமானமாகக் கூறப்படும் இவ்வாறான கருத்துக்கள் வரலாற்றைத் திரிவுபடுத்தும் என்று பெரும்பாலானோர் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். (ஒ-இ)

## அடித்தால்...

தலைவரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின்மூத்ததுணைத்தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட உள்ளூராட்சி சபை வேட்பாளர் அறிமுகக் கூட்டம் இளங்கலைஞர் மண்டபத்தில் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'எம்மைத் தாக்க நினைத்தால், தாக்கினால் திருப்பித் தாக்குவோம். பதில் சொன்னால் பதில் பறக்கும். இது தேர்தல்கள் காலம். அஹிம்சை - பாரம்பரியக் கட்சி என்பதை பாரம்பரியத்தோடு பாதுகாக்கவேண்டிய கடப்பாடும் பொறுப்பும் எமக்கும் உண்டு. இருப்பினும் எம்மைத் தாக்கினால் பதிலுக்குத் தாக்குவோம். அதனை வேட்பாளர்கள் செய்ய வேண்டாம். நாம் பார்த்துக்கொள்ளுவோம்' என்று அவர் குறிப்பிட்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த கட்சித் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, 2018 ஆம் ஆண்டு தேர்தல் அனுபவத்தின் அடிப்படையிலேயே நாம் தனித்துப் போட்டியிடுகின்றோம். கூட்டமைப்பின் பங்காளிகளாக இருப்போர் வேறாகப் போட்டியிடுகின்றனர். இந்தப் புதிய உத்தியில் நாம் பெரும்பான்மையைப் பெற முடியும் - என்றார்.

இந்தக் கூட்டத்தில் கருத்துத்தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்,

மன்னாரில் வைத்து கருத்துத் தெரிவித்த செல்வம் அடைக்கலநாதன் எம்மைத் தாக்கிப் பேசமாட்டோம் என்றார். ஆனால், அதனை அவர் மீறிவிட்டார். அதனால் நானும் ஒருதடவை வாய் திறக்கவேண்டியேற்பட்டது. கண்ணாடி வீட்டில் இருப்பவர்கள் சிந்திக்கவேண்டும். நாம் இன்னும் 10 சதவீதம் கூட எதுவும் சொல்லவில்லை. முழுமையாகச் சொன்னால் தாங்கமாட்டார்கள். தெற்கிலே மீண்டும் ஒரு மாற்றம் ஏற்படும் வாய்ப்பு இருக்கின்றது. அப்போது வடக்கு - கிழக்கு மக்கள் வழங்கிய ஆணையில் மாற்றம் இல்லை என்பது செய்தியாக இருக்கவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்த கட்சியாக இல்லாதபோது அரச தரப்பால் பதிவு செய்யப்பட்ட கட்சியின் சின்னமே குத்துவிளக்காக உள்ளது. அந்தச் சின்னம் இன்று கூட்டமைப்பின் பெயருக்குப் பயன்படுத்தப்படுகின்றது - எனவும் சொன்னார். (அ-ஒ-இ)

## விபத்தில்...

இளைஞரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 6 ஆம் திகதி மட்டுவில் - புத்தூர் வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இவர், வீதியில் கொண்டு செல்லப்பட்ட கம்பிக்கூட்டுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார். அவர் மயக்கமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்குச் சிகிச்சைகள் வழங்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுக்காலை உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ஒ-26)

## பச்சை...

இங்கு கருத்துத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, இம்முறை பெரும் போகத்தில் மேலதிக நெல் அறுவடை கிடைக்கும் என நம்புகிறோம். அதற்கமைய ஒரு கிலோ நெல்லை 100 ரூபா உத்தரவாத விலைக்கு அரசாங்கத்தின் ஊடாக கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

விளைச்சல் அதிகரித்தாலும் அரிசி வாங்குவதற்கு பொருளாதாரப் பலம் இல்லாத பிரிவினர் உள்ளனர். எனவே மார்ச், ஏப்ரல் மாதங்களில் இருபது இலட்சம் குடும்பங்களுக்கு 10 கிலோ கிராம் அரிசியை இலவசமாக வழங்கும் திட்டத்தை செயற்படுத்த இருக்கிறோம்.

தற்போது ஒரு ஹெக்ரேயருக்கு சுமார் 3 மெற்றிக் தொன் நெல் அறுவடை கிடைக்கிறது. நாம் செயற்படுத்தி வரும் விவசாயத்தை நவீனமயமாக்கும் திட்டத்தின் மூலம் ஒரு ஹெக்ரேயருக்கு குறைந்தது ஆறு மெற்றிக் தொன் அறுவடை பெறவேண்டும். முடியுமானால் அதனை 7 மெற்றிக் தொன்களாக உயர்த்த எதிர்பார்க்கிறோம்.

இப்பகுதிக்குத் தேவையான நீர் வசதிகளை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம். பூநகரிக் குளத்தை மீளப் புனரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இரணைமடுக்குளம் தற்போது தயார் செய்யப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தையும் வட மாகாணத்தையும் மீண்டும் நாட்டுக்கு உணவளிக்கும் அளவுக்கு அறுவடை செய்யக்கூடிய மாகாணமாக மாற்றுவதற்கு நாம் செயற்படுத்தி வருகின்றோம். இதற்கு மேலதிகமாக கால்நடைத் தீவன உற்பத்தியை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கிறோம் என்றும் தெரிவித்தார்.

அதன்பின்னர் கிளிநொச்சி - பன்னங்கண்டி கிராம வயல்வெளிக்குச் சென்ற ஜனாதிபதி அங்குள்ள விவசாயிகளின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்ததோடு அவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். (அ-ஒ-இ)

## தேர்தலுக்கு...

மன்றத்துக்குச் செல்லும் என அதன் தலைவர் நிமால் புஞ்சிஹேவ தெரிவித்தார்.

தேர்தல் செலவுகளுக்காக பெப்ரவரி மாத இறுதிக்குள் ரூ. 800 மில்லியன் ரூபாவை திறைசேரியிடம் கோரியிருந்ததாகவும், இந்த நிதியை தவணை முறையில் விடுவிக்கமுடியுமென்றும் திறைசேரி தெரிவித்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், வேட்பாளர்கள் மற்றும் தேர்தல் அதிகாரிகளுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறு மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சிடம் தேர்தல் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது. ஆனால், இந்தக் கோரிக்கையும் இதுவரை செவிசாய்க்கப்படவில்லை. அரசமைப்புச் சட்டத்தின்படி திறைசேரி உள்ளிட்ட அரச நிறுவனங்கள் ஆணைக்குழுவுடன் ஒத்துழைக்கவில்லை என்பது தேர்தல் ஆணைக்குழுவுக்குத் தெரியவந்தால், உயர் நீதிமன்றத்தில் சட்ட ரீதியில் தீர்வுகாணவேண்டியிருக்கும் என்று தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் எச்சரித்தார். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உக்ரைன் - ரஷ்யா மோதல்

# இந்தியா சமரசம் செய்தால் அமெரிக்கா வரவேற்குமாம்

## வெள்ளைமாளிகை அறிக்கை

**வொஷிங்டன், பெப். 13**

**உக்ரைன் - ரஷ்யா இடையிலான மோதலில் இந்தியா சமரச முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். அந்த முயற்சிகளை அமெரிக்கா வரவேற்கும் என்று வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.**

இதுதொடர்பில் வெள்ளை மாளிகை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

ரஷ்ய - உக்ரைன் போருக்கு ரஷ்ய ஜனாதிபதி புடின்தான் காரணம். அவரால் இப்போதுகூட போரை நிறுத்த முடியும். ஆனால், அவர் தொடர்ந்து உக்ரைன் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தி வருகிறார். இரு நாடுகளுக்கும் இடையேயான விரோதம் முடிவுக்குவர வேண்டும். பேச்சு நடத்த உக்ரைன் ஜனாதிபதி ஷெலன்ஸ்கி தீர்மானிக்க வேண்டும்.

இந்தப் போரை நிறுத்த அமெரிக்க ஜனாதிபதி முயற்சிக்கிறார். ஆனால், போரை நிறுத்த புடின் விரும்பாததால், நாங்கள் உக்ரைனுக்கு இராணுவ உதவி அளிக்கவேண்டியுள்ளது. பிரதமர் மோடியால், புடினை சமாதானம் செய்யமுடியும்.

இதுகுறித்து இந்தியப் பிரதமர் மோடியை மீண்டும் பேசும்படி கூறுவோம். உக்ரைன் போரை நிறுத்த அவர் எந்த முயற்சி எடுத்தாலும், அதை அமெரிக்கா வரவேற்கும் - என்றுள்ளது. (ம)


**பணிப்பெண் தேவை**

யரழ்ப்பாணத்தைச் சேர்ந்த கொழும்பில் வசிக்கும் குடும்பம் ஒன்றிற்கு வீட்டுப்பணிப்பெண் தேவை.

தொடர்பு: 077 386 6250

**காணி விற்பனைக்கு**

கொடிகாமம் சந்தைக்கு பின்னால் 50 பரப்புக்காணி உடனடி விற்பனைக்கு உண்டு. 1 பரப்பின் விலை- 20 லட்சம் (கொடிகாமம் புகையிரத நிலையத்திற்கு முன்பாகவும் பாதை உள்ளது)

தொடர்பு:074-291 9908,074-290 0610

**மணமகன் தேவை**

1992 ம் ஆண்டு பிறந்த சுவிஸ்லாந்து குடியுரிமை பெற்ற கன்னிராசி, ரோகினி நட்சத்திரமுடைய மணமகளுக்கு சைவபோசனமுடைய மணமகன் தேவை.

077 427 1512

**சமையல் வேலைக்கு ஆள்கள் தேவை**

யாழ். நாவலர் மகா வித்தியாலயம் அருகாமையில் உள்ள

**சைவ உணவகத்திற்கு**

சமையல் வேலைக்கு ஆள்கள் தேவை.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

(cs 23480) (2.6)

076 553 0813

**BUS உதவியாட்கள் தேவை**

யாழ்- கொழும்பு A/C BUSற்கு உதவியாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு: 076 009 4946

DHL உள்நாட்டு வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

▲11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகைகள்

▲UK - 1450/= ▲ Australia - 2800/=

Canada Normal - 1200/=

மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் கொம்நெற்

321, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். 0777 55 45 28


## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 13

தோட்டக் கிணறு ஒன்றிலிருந்து சடலம் ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் அண்ணா சன சமூக நிலையம், கெருடாவில் தெற்கு தொண்டைமானாற்றைச் சேர்ந்த ஆரன் பாலசிங்கம் (வயது-71) என்பவராவார்.

வீட்டிலிருந்து சுமார் 600 மீற்றர் தொலைவில் உள்ள தோட்டக் கிணற்றிலிருந்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்(ச்) சென்று விசார(ணை)களை மேற்(கொ)காண்ட பருத்தி(த்)துறை திடீர் இறப்பு (வி)சாரணை அதி(கா)ரி சதானந்தன் (மரண)வராசா விசாரணைகளை மேற்(கொ)காண்டு உடற்(கூ)ற்றுப் பரிசோத(னை)னக்கு உத்தரவிட்(டா)ள்ளார்.

(அ-ஒ-26)


# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 01 | | 12 |
| 01 | | 02 |
| 1936 | | 2023 |



**திரு.சுப்பையா தர்மலிங்கம்**

நல்லூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சுப்பையா தர்மலிங்கம் நேற்று (12.02.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணசாமி இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், அமரர் தவராணி (சுவிஸ்), தவசீலன் (ஜேர்மனி), தவபாஸ்கரன், தவச்செல்வி, தவநேசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணேசலிங்கம் (சுவிஸ்), தர்ஷிகா (ஜேர்மனி), தவக்குமார், ஈழவேணி (லண்டன்), சிறி, குமார், ரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிருந்தா, கார்த்திகேயன், கிருசிகன், மெலேனிகா, சங்கீதன், மோகீசன், தரணிகன், கஜின், கனிஷா ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர் பரமேஸ்வரியின் அன்புச் சகோதரனும், அமரர் இராசதுரை, அழகரத்தினம், நேசரத்தினம், யோகரத்தினம், தயாவதி, தயாரதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், நித்தியகல்யாணி, கிளி, அழகு, ரஞ்சி, ரகு, ரவி, தவம், அமரர்களான செல்லம்மா, ராசு ஆகியோரின் உடன்பிறவா சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2023) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

076 8539 152 (மகன்)
077 3662 400 (மருமகன்)

தகவல்: குடும்பத்தினர்.

(CS 23485) 1-6

# மரண அறிவித்தல்



சங்கீத வித்துவான் திருமதி

**ஜஸ்ரின் ஞானசேகரம் மேரி சறோஜா**

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

தோற்றம் 25.03.1952 — மறைவு 09.02.2023

இல. 203/10, ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜஸ்ரின் ஞானசேகரம் மேரி சரோஜா கடந்த (09.02.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானமுத்து - மரியம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நிக்கிலஸ் - ஞானம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற ஜஸ்ரின் ஞானசேகரத்தின் அன்பு மிகுந்த மனைவியும், காலஞ்சென்றவர்களான ஞானமணி, திரேசம்மா, அடைக்கலம் நித்தியானந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சாருமதி (முகாமையாளர் - இலங்கை வங்கி, கல்வியங்காடு கிளை), ஜோர்ஜ் பிரதீபன் (Staff - MAG), பிறின்ஸ் பிரியதர்ஷன் (பொறியியலாளர் - கொழும்பு), பிரசன்னா (Medical Representative - Pharma Associates) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வோல்வின் (ஆசிரியர் - சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை), றொசினா, பர்மியா (ஆசிரியை - கொழும்பு திருக்குடும்ப கன்னியர் மடம்), சரண்யா (மேலதிக விவாகப் பதிவாளர் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புமிகு மாமியாரும், டீலன், கெய்லினா, கெய்நிஷா, ஹர்ஷிதா, கௌசாக்யா, ஆதுரி, அதிதி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.02.2023) திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ். புனித அடைக்கல அன்னை தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

203/10, ஆசீர்வாதம் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

வோல்வின் - 077 704 1322
பிறின்ஸ் - 077 390 3009
பிரசன்னா - 077 341 2943




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் ... ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org